சுருக்கம்

சிறப்பு பொது விநியோகத் திட்டம் – நியாய விலைக் கடைகள் மூலம் செறிவூட்டப்பட்ட ஆட்டா விநியோகம் – ஆணை வெளியிடப்படுகிறது.

– – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – –

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் ( டி1) துறை

அரசாணை (நிலை) எண். 4 நாள் : 11.01.2008

படிக்க :

1) அரசாணை (நிலை) எண் 45, கூ உ (ம) நு.பா (டி1) துறை, நாள் 12–03–1998.
2) அரசாணை (நிலை) எண். 131, கூ உ (ம) நு.பா (டி1) துறை, நாள் 27–04–2007.
3) அரசாணை (நிலை) எண் 266, கூ உ (ம) நு.பா (டி1) துறை, நாள் 30–08–2007.
4) உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரின் நே.மு.க.எண்.இ3/9479/2007, நாள் 07–11–2007 மற்றும் 24–12–2007.
5) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், நே.மு.க.எண். பி.எஸ்.90838/07, நாள் 11–12–2007.

– – – – –

ஆணை

பார்வையில் படிக்கப்பட்ட ஆணையின்படி 14–04–2007 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு பொது விநியோகத்திட்டம் அரசால் ஆய்வு செய்யப்பட்டது. தற்போது வழங்கப்பட்டுவரும் பிற பொருட்களுடன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவையும் (ஆட்டா) வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. பொதுமக்களை இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைவிலிருந்து காப்பாற்றும் பொருட்டு கோதுமை மாவில் இரும்புச் சத்து, போலிக் அமிலம், வைட்டமின் ஏ ஆகிய உயிர்ச் சத்துக்களை சேர்த்து செறிவூட்டப்பட்ட ஆட்டாவாக மாற்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கலாம் என அரசால் முடிவெடுக்கப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் கோதுமையில் மாதம் 2500 மெ.டன்னுக்கு மிகாமல், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக அரைத்து வழங்க மைய அரசும் இசைவு தெரிவித்துள்ளது.

**2.** அரவைக்கூலியினை நிர்ணயித்தல் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவின் விற்பனை விலையினை நிர்ணயிப்பது குறித்து உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையரைத் தலைவராகவும், நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், அரசு நிதித் துறைச் செயலாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு, 18–12–2007 மற்றும் 20–12–2007ல் தமிழ்நாடு உருளைமாவு ஆலைகளின் சங்கங்களுடன் கலந்தாலோசித்து தக்க பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது. இப்பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோதுமையில் 2500 மெ.டன் கோதுமையை ஒவ்வொரு மாதமும் கூலி அரவைத் திட்டத்தின் கீழ் தகுதியான உருளைமாவு ஆலைகளுக்கு அவைகளின் அரவைத் திறனுக்கேற்ப பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி விகிதாச்சார அடிப்படையில் பிரித்து கொடுத்து போலிக் அமிலம், இரும்புச் சத்து மற்றும் வைட்டமின் ஏ ஆகியவற்றை சேர்த்து செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக மாற்றி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் கிலோ ஒன்றுக்கு ரூ.11/– என்ற விலையில் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் விநியோகிக்கலாம் என அரசு ஆணையிடுகிறது. ஒவ்வொரு மாதமும் இதற்கென கோதுமையை விடுவித்ததுபோக மீதமுள்ள கோதுமையை வழக்கமாக வழங்குவதுபோல் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கவும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் கோதுமையிலிருந்து பெறப்படும் கோதுமை மாவின் அளவு, கூலி விகிதம், போக்குவரத்துக் கட்டணங்கள், எரிசக்தி, தரம் மற்றும் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் விலை ஆகியவற்றை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| | கட்டண விகிதம் டன் ஒன்றுக்கு |
|---|---|
| போக்குவரத்து கட்டணங்கள் | ரூ.231.00 |
| எரிசக்தி கட்டணங்கள் | ரூ.360.00 (80யூனிட் X ரூ.4.50) |
| தொழிலாளர் கூலிச் செலவு | ரூ.160.00 |
| கோணிப் பைகள் செலவு | ரூ.270.00 (கூடுதலாக 18 கோணிப்பைகளுக்கு ஆகும் செலவும் சேர்த்து) |
| பராமரிப்பு மற்றும் தேய்மானம் | ரூ.28.00 |
| வங்கி உத்திரவாத கமிஷன் | ரூ.20.00 |
| அரவைக்கூலி | ரூ.112.00 (ஒரு குவிண்டாலுக்கு) |
| விளிம்புத்தொகை | 5 சதவிகிதம். |

கோதுமையிலிருந்து பெறப்படும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் தவிடு ஆகியவற்றின் சதவீத அளவு

| | |
|---|---|
| செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு | 95 % |
| தவிடு | 3 % |

| | |
|---|---|
| கழிவுப் பொருட்கள் | 2 % |
| ஈரப்பதம் | 14 % (உயர்ந்தபட்சம்) |
| கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதிக்கப்படும் விளிம்புத் தொகை | ரூ.1.25 (கிலோ ஒன்றுக்கு) |
| நியாய விலைக்கடைகளில் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவின் விற்பனை விலை | ரூ.11.00 (கிலோ ஒன்றுக்கு |
| உயர் தொழில் நுட்ப முறைப்படி தயாரிக்கப்பட்ட பாலிபுரோபிலின் ஒரு கிலோ பைகளில் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு அடைப்பதற்கு | ரூ.200.00 (ஒரு குவிண்டாலுக்கு) |

5. மேலே பத்தி 4ல் கண்ட ஆணைகளின்மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு உருளைமாவு ஆலைகளிலிருந்து பெறப்படும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவின் தரம் உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரக்கட்டுப்பாட்டின்படி உள்ளது என உறுதி செய்யுமாறும், நியாயவிலைக் கடைகளில் அரசு நிர்ணயித்துள்ள விலையில் விற்பனை செய்யவும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலே பத்தி 4ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள விற்பனை விலை ஒரு மாதத்திற்கு மட்டுமே பொருந்தும். பின்னர் தற்போது நிர்ணயிக்கப்பட்ட அரைவைக் கூலியான ரூ.112.00ஐ அடிப்படை மதிப்பாக வைத்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெற்று அரைவைக் கூலி நிர்ணயம் செய்யப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்,
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
உணவுப்பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை—5.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை—10.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை—10.
மாநிலக் கணக்காயர், சென்னை—18/சென்னை—18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை—18/ சென்னை—18 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை—5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகல்
நிதித்துறை, சென்னை—9
இருப்புக் கோப்பு/உதிரி.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்